நாம் ஏன் பாவம் செய்வதில்லை

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெப பங்காளரே,

பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற பிரதான ஆசாரியனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். பாவம் வேகமாக பரவி வரும் நாட்கள் இவைகள். பாவத்தை விளையாட்டாக நினைக்கத் தூண்டும் சிந்தையை சிறுவயதிலேயே பிள்ளையின் உள்ளத்தில் தெளிக்கப் பாடுபடும் வியாபார உலகம் இது. அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போகும் கடைசி காலம் இது (மத். 24:12). வழுவாதபடி உங்களைக் காக்கவும் தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர் தாமே உங்களை காத்துக்கொள்வராக.

கொஞ்சம் சிந்தித்துப்பாருங்கள். மீடியா (Media) வெளியீட்டுத்துறையினர் வெளியிடுமட ஒவ்வொரு விளம்பரமும் அது சின்னத்திரையில் (TV) ஆகட்டும் அல்லது காகித அச்சில் ஆகட்டும் சிந்தையை தூண்டிவிடுவதோடு, உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவதற்கு அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. Suggestive language அதிகமாக உபயோகப்படுகிறது. எனவேதான் சொன்னேன். பாவம் விளையாட்டாக கருதப்படுவதற்காகவே சத்துரு வேகமாக செயல்படுகிறான். நர்சரி வகுப்பில் சொல்லிக் கொடுக்கப்படும் பாட்டு என்ன?

Johny Johny Yes Papa
Eating sugar no papa
Telling lies No papa
Open your mouth Ha! Ha ! Ha !

என்ன? பொய் சொல்லிவிட்டு, கண்டு பிடிக்கப்பட்டுவிட்டால் அதை எளிதாக எடுத்துக்கொண்டு ஹா! ஹா! ஹா! என்று மழுப்பி விடு. இதனை அறிந்து கொள்ளும் பிஞ்சு உள்ளம் பெரிதாகும்போது “அவள் தின்று, தன் வாயைத் துடைத்து நான் ஒரு பாவமும் செய்யவில்லை” என்பாள் என்று விபசாரிகளை குறித்துக் கூறும் வார்த்தைகளை (நீதி 30:20) போல கூறினால் ஆச்சரியப்படுவதற்கில்லையே! பாவத்தைக் கண்டிக்க வேண்டியவர்களும் பாராமுகம் கொண்டு நடக்கும்போது இது இன்னமும் உச்ச நிலைக்குத்தான் தேசத்தைக் கொண்டு போய்விடும் என்பதில் சந்தேகமில்லை.

தேவனால் பிறந்தவன் என்று அறிக்கை செய்பவர்களாகிய நாம் ஏன் பாவம் செய்வதில்லை என்பதனை கேட்ப்பார்த்தால் உண்மையாக நிலையைக் கண்டு கொள்ள வாய்ப்புண்டு.

“ஒரு வேளை பாவம் செய்ய இன்னமும் ஒரு சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவில்லை” என நீங்கள் கூறலாம். மற்றவர்களை பாவி என்று கணிப்பதற்கு நமக்கு அதிகம் நேரம் பிடிக்காது. ஆனால் “அவர்கள் இருந்த சூழ்நிலையில் நான் இருந்தால் எப்படி நடந்து கொண்டிருப்பேன்” என்று சிந்திப்பவர்கள் சிலரே. அவர்கள் மாட்டிக்கொண்டது போலவோ அல்லது சந்தர்ப்ப சூழ்நிலையோ இதுவரை நமக்கு சந்திக்கும் வாய்ப்பை தந்திருக்காது. மற்றவர்களை எளிதாக குற்றவாளிக் கூண்டில் ஏற்றுபவர்கள் பொய் சொல்லுவதிலோ, ஏமாற்றுவதிலோ, இச்சிப்பதிலோ கோபம் கொள்வதிலோ அதே நிலையை சந்தித்திருந்தால் குற்றம் சாட்டப்பட்டவரைக் காட்டிலும் மோசமாக நடந்து கொண்டிருக்க வாய்ப்புண்டு. நாம் பாவம் செய்யறிருப்பதற்கு இந்த காரணம் உண்மையென்றால் அது நம்மை பரிசுத்தர்கள் என்று தீர்க்கமுடியாத நிலைக்கே தள்ளிவிட்டு விடும்.

அல்லது பாவத்தினால் கிடைக்கும் தண்டனை நம்மை பயமுறுத்திக் கொண்டே இருக்கலாம். நான் இப்படிச்செய்தால் அப்படித் தண்டனை கிடைக்கும் என்ற வேத அறிவும், நியாயப் பிரமாணத்தின் தெளிவும் நம்மை பாவம் செய்யாதபடி தடுத்துக்கொண்டிருக்கலாம். அதுவும் என்னை கண்டுபிடிக்கக்கூடாத ஓர் இடத்தில் பாவம் செய்வதற்கோ, அல்லது மற்றவர்கள் காணக்கூடாத இடத்திற்கு என்னை தள்ளிக் கொண்டு போவதற்கான வாய்ப்புகளை உண்டாக்குவதற்கோ வழி வகுத்துவிடும். அப்படிப்பட்ட நேரங்களில் நான் விழுந்துவிடுவதற்கு வாய்ப்புகள் பெருகிவிடும் கண்டுபிடித்தால் தானே தண்டிப்பார்கள். இல்லையென்றால் நான் சுத்தவானத்தானே காட்சியளிப்பேன், என்று மாய்மால வாழ்க்கைத் என்னைத் தள்ளிவிடும்.

அல்லது “என்னுடைய சாட்சியைக் கெடுத்துக்கொள்ள எதுவாகும்” அது என்னுடைய மதிப்பை சமுதாயத்தில் கெடுத்துவிடும். பின்னர் அதனை எடுத்துக் கட்டுவது மிகவுமட கஷ்டம் என்ற பயம் நம்மை ஆட்கொள்வதினால் நாம் பாவம் செய்ய வாய்ப்புகள் வரும்போது விலகிக்கொள்ளமுடியும். ஆனால் அதுவும் பயத்தின் அடிப்படையில் அதுவும் சுயத்தைக் காத்துக்கொள்ள மேற்கொள்ளப்படும் உத்தியாகத்தான் நான் காண்கிறேன். இது வேதம் கற்றுத்தரும் முறையாக எனக்குத் தெரியவில்லை. “நீங்கள் மனுஷர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள். தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார். மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது” (லூக் 16:15)

அல்லது “கண்டுபிடித்துவிட்டார்களே” என்று ஒத்துக்கொள்வதினால் வரும் சூழ்நிலைகள். கண்டுபிடிக்காவிடில் சரி . கண்டுபிடித்துவிட்டால் மன்னிப்பு கேட்டுக் கொள்ளலாம். இரக்கம் பெற்றுக்கொள்ளலாம் என்ற நினைவுகளில் மிதப்போரும் உண்டு. இது கிருபையை ஏளனம் பண்ணுவதற்கு சமானம்.

“நான் ஏன் பாவம் செய்வதில்லை?” என்ற கேள்விக்கு சரியான விடை நான் தேவனால் பிறந்தவன் என்பதாகத்தான் இருக்கவேண்டும். ஏனெனில் “தேவனால்

பிறந்த எவனும் பாவம் செய்யான்'' (1 யோவான் 3:9) அல்லது செய்ய இயலாதவனாக மாறுகிறான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான் என்றுதான் வேதம் அடித்துக் கூறுகிறது. ஒருவேளை இந்த வசனத்தை ''பாவத்தில் நிலைத்திருக்கமாட்டான்'' என்றுதான் கொள்ளவேண்டும் என்று வாதிடுவோர்கள் உண்டு. ஆனாலும் வேதம் கூறும் உன்னத நிலைக்கே நம்மை உயர்த்திக்கொள்வதே தேவன் நம்மை குறித்து வைத்திருக்கும் நோக்கமாகும். உன்னத நோக்கமே உயர்வுக்கு நம்மை உயர்த்தும். ''பாவஞ் செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறேன்''. (1 யோவான் 3:8) என்ற வார்த்தைகள் இதயத்தில் தொனிக்க வேண்டியவை. அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை. பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை. அவரை அறியவுமில்லை (V:6) என்ற வசனம் இன்னமும் நம்மை அவருக்குள் வேர்கொள்ளச் செய்யவே தூண்டுகிறது. நான் தேவனுடைய பிள்ளை என்ற உணர்வு நம்மை ஆட்கொள்வதும், நிரப்புவதும் நம்முடைய அன்றாடகத் தேவை.

இதைத்தான் பவுலும் ''மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே. வானத்துகுறியவர் எப்படிப்பட்டவரோ வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே'' (1 கொரி 15:48) என்றே கூறுகிறார்.

''நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள் (ரோமர் 6:11) என்பது எண்ணத்தில் ஏற்பட வேண்டிய மாறுதலை நமக்கு உணர்த்திக் கொண்டேயிருக்கவேண்டியவை.

கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன் ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (கலா 2:20) என்பது என்றே கூறுகிறார்.

''நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள் (ரோமர் 6:11) என்பது எண்ணத்தில் ஏற்பட வேண்டிய மாறுதலை நமக்கு உணர்த்திக் கொண்டேயிருக்கவேண்டியவை.

கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன் ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனிநான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (கலா. 2:20) என்பது ஏனோதானே என்ற தத்துவம் அல்ல.

நீங்கள் மரித்தீர்கள் உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது (கொலே 3:3) என்ற வார்த்தைகளின் ஆழத்தை சுவைத்தவர்கள் எத்தனைபேர்.

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிந்திக்கப்பண்ணுகிறவர் தேவன் (2 கொரி 2:14) என்ற அறிவு நம்மில் அதிகமதிகமாக பெருக வேண்டும்.

தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் (1 யோவன் 5:4) என்பது நம் வாழ்விலும் விளங்குவதற்கெதுவாக நம்மில் இருக்கின்ற வித்து என்ன என்பதனை உணர்ந்து வாழ்வோம்.

இராக் யுத்தம், காஷ்மீரின் இரத்த வெள்ளங்கள், மனித இனத்தின் பிடிவாதம், மூர்க்கம், முராட்டாடட்டம், வெறுப்பு, கசப்பு, பயம், தற்பெருமை, வறட்டு கவுரவம் ஆகியவற்றில் உண்டானவைகளே அது அனைத்து மக்களையும் பாதிக்கிறது.

ஆனால் அதே நேரத்தில் இந்தியாவில் கிரிக்கெட் போட்டிக்காக நடைபெற்ற பூசைகள், பாலாபிஷேகங்கள் நம்மவருக்கு உலகநடப்பில் இருக்கும் அக்கறையின்மையே காட்டிவிட்டு இந்தியா கிரிக்கெட் போட்டியில் ஜெயிக்கவேண்டும் என்பதனைத்தான் நாம் சிறப்பாக எண்ணவேண்டும் இல்லாவிடில் நீ இந்தியன் அல்ல என்று நினைக்கும் அளவுக்கு நாடு சாங்கோபமாக ஜீவிக்கிறது. தேசபக்திக்கு கொடுக்கப்படும் அடையாளமாக மாற்றப்பட்டக்கொடுமை நம்மை இன்னமும் தட்டி எழுப்பி இந்த தேசத்திற்காக தேவனிடத்தில் போராட நம்மை ஏவட்டும்.

சத்தியவேதம் பொய்க்கவில்லை என்பதனைத் தான் இன்றைய உலகப்போக்கு நமக்கு எடுத்துரைக்கிறது உலகத்தின் போக்கில் சென்று விடாதபடி நம்மை ஆவியானவர் காப்பாராக.

மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுது ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார் இயேசு (லூக் 21:36) இது அதிகமாக ஜெபிக்கும் நேரம், போராடும் நேரம், விண்ணப்பம் பண்ணவேண்டிய வேளை. நாம் செய்யவில்லை என்றால் யார் செய்வது? நம்மைவிட்டால் தேவனுக்கு யார் உண்டு? இரத்தம் சிந்தி மீட்டவருக்கு இந்த காரியத்தினையும் கைமாறாக செய்யாவிடில் என் வாழ்க்கையின் காரியம் தான் என்ன?

செய்திகள் :

தர்பங்கா கூட்டங்களில் சகோ. மோகன் C. லாசரஸ் மூலமும், பட்னா கூட்டங்களில் சிங்கப்பூர் நண்பர்களோடு என்னையும் உபயோகித்த தேவனுக்கு ஸ்தோத்திரம். உங்கள் ஜெபங்களுக்கு நன்றி. பட்னா ஊழியர் கூடுகையும் 1000 ஊழியர்களுக்கு மிகவும் பிரயோஜனமாக அமைந்தது.

ராஞ்சி, டெல்லி, போக்ரா (நேபாளம்) ஊழியங்களிலும் பெரும் அசைவை காண்போம் என்று விசுவாசிக்கிறோம். உங்கள் ஜெபமும் எங்களுக்கு இருக்கிறதே.

மே மாதத்தில் 19-21 வரை கோவையின் அருகில் காருண்யா நகரில் நடக்கும் வாலிபர் முகாமும் ஆகஸ்டு மாதத்தில் பாளையில் நடைபெறும் முகாமும் "யுத்த வீரர்கள்" சீறுகொண்ட எழச்செய்யும் என நம்புகிறோம். ஜெபியுங்கள்.

பாவத்தை பாரா சுத்த கண்ணன் அவர்
பாதகம் போனோர் பாரில் அவரின்
பாதம் பற்றிக் கொண்டதின் நோக்கம்
பரலோகம் செல்லுவது மாத்திரமல்ல
பரமனின் வித்தை உடையோர்
பாவத்தின் மேல் வெற்றி பெற்றதினால்
பலரையும் கவர்ந்திழுக்கும் சாட்சியாக மாறி
பரத்தின் செய்திதனை பதறாமல் சிதறாமல்
பார் முழுவதும் கூறி அறிவித்து வாழ்ந்து
பாமரர்கள் திருப்பி ராஜ்யம் ஸ்தாபிக்கவே

அன்பரின் அறுவடைபணியில்

அன்புசகோதரன் அகஸ்டின் ஜெபக்குமார்